<u>முதன்மை சார்பு நீதிமன்றம், ஈரோடு, ஈரோடு மாவட்டம்.</u>

OS.No. 1045/2021 பெயர் - சுகந்தன் நாள்.19.10..2024

வா.சா.1 ஆஜர். சத்திய பிரமாணத்தின் பேரில் விசாரணை செய்யப்பட்டார்.

**வா.சா.1 : 2 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி-**

எதிர் வழக்குரையில் சொத்துக்கள் கிரையம் செய்யப்பட்டது பற்றி குறிப்பிடப்பட்டுள்ள நிலையில் அதை மறுத்து பதில் வழக்குரை தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில் மேற்படி கிரையதாரர்கள் இவ்வழக்கில் தரப்பினர்களாக சேர்க்கப்படவில்லை என்றால், சரிதான். 20.10.2004 ம் வருடம் இரண்டாம் பிரதிவாதி மற்றும் எனது தகப்பனார் மகாலிங்கம் ஆகியோர் சேர்ந்து கூட்டாக சொத்தை கிரையம் பெற்றனர் என்றால், சரிதான். மேற்படி கிரைய தேதியில் எனது வயது 7 மட்டுமே என்றால், சரிதான். எனது அப்பா எந்த தொகையைக் கொண்டு மேற்படி சொத்தை கிரையம் பெற்றார் என்று எனக்கு நேரடியாகத் தெரியுமா என்றால், நேரடியாகத் தெரியாது. தற்சமயம் என்னிடம் காண்பிக்கப்படுவதுதான் மேற்படி 20.10.2004 ம் தேதியிட்ட கிரையப்பத்திரத்தின் சான்றிட்ட நகல் என்றால், சரிதான். அது **பி.வா.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அந்த சொத்திலும் தனக்கு உரிமை இருப்பதாக 2 ம் பிரதிவாதி குறிப்பிட்டுள்ளார் என்றால், சரிதான். எனது திருமணம் எனது தாத்தா நடத்தி வைத்தார். தற்சமயம் என்னிடம் காண்பிக்கப்படும் திருமணப்பத்திரிக்கை என்னுடையதுதான் என்றால், சரிதான். அது **பி.வா.சா.ஆ.6** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி பத்திரிக்கையில் அழைப்பினராக எனது அப்பா, அம்மா, சித்தப்பா, சித்தி ஆகியோரின் பெயர்கள்தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், சரிதான். மேலே எனது தாத்தா பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது. என் தாத்தா திருமனத்தின் அழைப்பினராக குறிப்பிடப்படவில்லை என்றால், சரிதான். எனது அம்மாதான் எனது திருமணத்தை நடத்தி வைத்தார் என்றாலும், நான் கூறியதுபோல் எனது தாத்தா தான் எனது திருமணத்தை நடத்தி வைத்தார் என்று வழக்கிற்காக பொய்யாக சொல்லுகிறேன் என்றாலும், சரியல்ல. தாவா சொத்தை பொறுத்ததான வருவாய்த்துறை ஆவணங்கள் எதுவும் என்னால் இந்த வழக்கில் தாக்கல் செய்யப்படவில்லை என்றால், சரிதான். தாவா 2 முதல் 4 அயிட்ட சொத்துக்கள் குறித்ததான வருவாய்த்துறை ஆவணங்கள் அனைத்தும் 3 ம் தரப்பினர் பெயரில் உள்ளது என்றால், சரியல்ல, 2 ம் பிரதிவாதியின் பெயரிலும், அவர்களது நண்பர்கள் பெயரிலும் தான் உள்ளது. சமீபத்தில் வில்லங்க சான்று போட்டு பார்த்த சமயத்தில் தான் அது குறித்து தெரிந்து கொண்டேன். தாவா சொத்துக்களின்

அனுபவத்தில் யார் உள்ளனர் என்று எனக்குத் தெரியாது. தாவா சொத்துக்கள் யார் பெயரில் உள்ளது என்று தெரியாத காரணத்தினால்தான் சொத்துக்கள் குறித்ததான ஆவணங்களை நான் தாக்கல் செய்யவில்லை என்றால், சரியல்ல. எனது அம்மா மற்றும் பாட்டியை இந்த வழக்கில் சாட்சியாக விசாரிக்க உள்ளேனா என்றால், இல்லை. நான், 1 ம் பிரதிவாதியான எனது பாட்டி, 4 ம் பிரதிவாதியான எனது அம்மா மற்றும் எனது மனைவி ஆகியோர் சேர்ந்து ஒரே குடும்பமாக வசித்து வருகிறோம் என்றால், இல்லை. அவ்வாறு வழக்கிற்காக பொய்யாக சொல்லுகிறேன் என்றால், சரியல்ல. நான், எனது அம்மா, பாட்டி அனைவரும் நல்ல உறவு முறையில் இருந்து வருகிறோம் என்றால், பேசிக் கொள்வோம், நல்ல உறவு முறையில் இல்லை. அவ்வாறு வழக்கிற்காக பொய்யாக சொல்லுகிறேன் என்றால், சரியல்ல. இந்த வழக்கை உரிய காலத்தில் நான் தாக்கல் செய்யாத காரணத்தினால் சட்டப்படி நிலைநிறுத்ததக்கதது அல்ல என்றால், சரியல்ல. சொத்தின் விவரங்கள் குறித்து எனக்கு தெரிய வந்ததற்கு பின்னிட்டு குறிப்பிட்டு காலகெடுவிற்குள் வழக்கை தாக்கல் செய்து விட்டேன். உரிய தரப்பினர்கள் சேர்க்காத காரணத்தினால் இந்த வழக்கு நிலைநிறுத்தத்தக்கது அல்ல என்றால், சரியல்ல. 20.10.2004 ம் தேதிய கிரைய சொத்தை இந்த வழக்கில் சேர்க்காமல் தாக்கல் செய்துள்ள இந்த வழக்கு சட்டப்படி நிலைக்கத்தக்கது அல்ல என்றால், சரியல்ல. எனது சித்தப்பா திருமூர்த்தியுடன் நல்ல உறவு முறையில் இருந்து வருகிறேன் என்றால், பேசிக் கொள்வோம், நல்ல உறவு முறையில் இல்லை. அவ்வாறு வழக்கிற்காக பொய்யாக சொல்லுகிறேன் என்றால், சரியல்ல. வழக்கு சட்டப்படி தள்ளுபடி செய்யத்தக்கது என்றால், சரியல்ல.